


அமரர்

# திரு.சாந்தலிங்கம் குணரத்தினக்குருக்கள்

(பன்னங்கண்டி ஐயா)

அவர்களின்

11 ஆம் நாள் சிவபதப்பேறு குறித்த

# மோட்சதீப மலர்

18.01.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தாவளை இயற்றாலையை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சாந்தலிங்கம் குணரத்தினக்குருக்கள்

## (பன்னங்கண்டி ஐயா)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த


# மோட்சதீப மலர்

## 2015.01.18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்பின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
உதவிக்கு உத்தமராய்
எங்கள் குடும்பம் உயர உழைத்த
எங்கள் குல தெய்வமே

தாய்க்கு தலைமகனாய் தந்தைக்குப்பின்
தனயன் என்ற சொல்லிற்கமைய
வாழ்ந்து காட்டிய எமது குலவிளக்கே
ஆறுமோ எம் உள்ளம் மாறுமோ
எங்கள் துயரம் மறையுமோ
உங்கள் நினைவு

நீங்காத நினைவுகளுடன் எம்
உள்ளத்தில் வாழ இந்நினைவு
மலரினை சமர்ப்பணம் செய்கின்றோம்



**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1934 | 2015 |
| 01 | 01 |
| 21 | 08 |

அமரர்

# திரு. சாந்தலிங்கம் குணரத்தினக்குருக்கள்

## திதி வெண்பா

சால்பு நிறை தாவளை யற்றாலையின்
வீர சைவ குலநின்று ஜோதியான
சாந்தலிங்கம் குணரத்தினக் குருக்கள்
யயவருடம் மார்கழித்திங்கள் 23ம் நாள்
ஆயிலிய நட்சத்திரமதில் மண்ணை விட்டு
விண்சேர்ந்து பரமன்பாதம் பணிந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## தோத்திரப் பாக்கள்

### விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவனென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனெப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோனடி
யெமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் மின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்
அடியின்கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கிநின்ற முகமொன்றே
மாறுபடுசூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறைஅரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.சாந்தலிங்கம் குணரத்தினக்குருக்கள் (பன்னங்கண்டி ஐயா)அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் புகழ் பெறும் எழில்மிகு இலங்கைத் தீவின் யாழ்ப்பாண நன்நகரில் செந்தமிழும், சைவமும் சீரிய நற்குணமும் சேர்ந்த சான்றோர்கள் வாழ்கின்ற இடம் கொடிகாமம் ஆகும். இங்கு தாவளை, இயற்றாலை எனும் இடம் அமைந்துள்ளது.

வரட்சியற்ற தோட்டநிலங்கள் கொண்டு வளஞ்சேர்க்கும் தாவளை, இயற்றாலையில் வீரசைவ உயர் குலத்தில் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் சாந்தலிங்கம் ஆச்சிமுத்து தம்பதியினர் இவர்களின் இல்லறத்தின் பயனாக மங்கலமாம் நன்மக்கட் பேறாக தவமணி, குணரத்தினம், சர்வானந்தம், யோகராசா எனும் நால்வரை பிள்ளைக் கனிகளாக பெற்றெடுத்தனர்.

இவர்களில் ஆண்களின் முதற் புதல்வனாக 21.01.1934 ஆம் ஆண்டில் குணரத்தினமாக ஒளி வீசி இப் பூமியிலே அவதரித்தார். அமரர் குணரத்தினக் குருக்கள் அவர்கள் தனது பள்ளிப்பருவத்தில் ஆரம்பக் கல்வியினை மீசாலை வீரசிங்கம் அ.த.க பாடசாலையிலும், உயர்கல்வியினை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பயின்று தமிழ் பண்டிதராகவும், தட்டச்சுப் பதிப்பாளராகவும் இறை தொண்டாற்ற வேண்டி சரசாலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் அர்ச்சகராகவும் கடமையாற்றினார்.

அவ்வாறு வாழ்ந்துவருகையில் தனது உரிய வயதை அடைந்த குணரத்தினக்குருக்கள் அவர்கள் பெற்றோர் விருப்பிற்கு அமைய 1956 இல் செல்லத்துரை தங்கம்மா தம்பதியினரின் அருந்தவப் புதல்வியான சீதாலக்சுமி அம்மையாரை தனது இல்லத்தரசியாக்கினார். அந்த வேளையில் தனது இல்லறவாழ்வை சிறப்பாக்க வேண்டி சிவனருள் கடாட்சத்தால் திருகோணமலை சிவாலயத்தில் கணக்காளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றினார். அவ்வாறு இருக்கையில் தனது மூத்த புதல்வியாக அமரர் அருந்தவமணியை பெற்றார். மீண்டும் ஒரு சிரேஷ்ட புத்திரனாக அமரர் விவேகானந்தக் குருக்களையும் பெற்றெடுத்து வாழ்ந்து வந்தார்.

பின்பு திருகோணமலை நகரை விட்டு வன்னி மாவட்டத்திற்கு சென்று அங்கு விவசாய திணைக்களத்தில் உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் வேளையில் இறைவனின் அருட்கடாட்சத்தினால் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருவாக இறைவனுக்கு தொண்டாற்றி வந்தார். வரும் வேளையில் அமரர் ராதா எனும் மகளை பெற்றெடுத்து இழந்த காரணத்தால் அதன் பின் பிறந்த மகளுக்கு விநாயகரின் திருநாமம் கொண்ட ஆசிரியர் விக்கினேஸ்வரி எனும் நாமத்தை சூட்டினார்.

பின்பு மருதமும், முல்லையும், நீர்வளமும் சூழ்ந்த ஸ்ரீ பன்னங்கண்டி பிள்ளையார் ஆலயத்தின் இறையருள் கிடைத்து அங்கும் நீண்ட காலமாக அவ்வாலயத்தின் மூத்த குருவாகவும், ஆலயவளர்ச்சியின் முழுமுதற் கர்த்தாவாகவும் அங்கு காணப்படும் மரங்கள் ஒவ்வொன்றும் அவரின் பெயரை உச்சரிக்கும் அளவிற்கும், அங்கு வாழ்மக்கள் அனைவரின் உள்ளங் கவர்ந்த உத்தமனாகவும், வித்தியாரப்பந்தின் குருவாகவும், மாங்கல்ய வாழ்வை அளிப்பவராகவும், நாமம் சூட்டும் நன்மகனாகவும், நற்குருவாகவும், அம்மண்ணில் பிறந்த மைந்தனாகவும், ஈடு, இணையற்ற இறைபக்தியாளனாகவும் வாழந்து வழிகாட்டினார்.

பின் தம் பருவமடைந்த பிள்ளைகளுக்கு திருமணம் எனும் பந்தத்தினை ஆரம்பித்தார். முறையே விவேகானந்தக்குருக்கள் நாகேஸ்வரி எனும் நங்கையை மணந்து அமரர் துஷ்யந்தன், துவாரகக்குருக்கள், துஷ்யந்தினி என்போரை பேரப்பிள்ளைகளாகவும், பின்பு அருமை மகள் விக்னேஸ்வரியை பரிபாலன் ஐயா அவர்களிற்கு மணம் முடித்து அவர்களின் பிள்ளைகளாக ரிசாந்தினி, பாகீஸ்வரி ஆகியோரை பேரப்பிள்ளைகளாகவும், பின்பு தன் இனிய மகனான விபுலானந்தக்குருக்களை ராணிமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவருக்கு கணவனாகவும் அமைத்து அவர்களின் பிள்ளைகளாக சுவேந்திரா, அபிவர்ணன் ஆகியோரை பேரர்களாகவும் பெற்று பின் பேரர்களின் பிள்ளைகளாக வைஸ்ணவி, கோபிகா, டர்னிக்கா ஆகியோரை பூட்டப்பிள்ளைகளாகவும் பெற்று மிகவும் ஆனந்தத்துடன் தன் வாழ்வை அளித்து வந்தார்.

வரும் வேளையில் தன் இயலாத நிலையில் கூட இறைபணி ஆற்ற எண்ணி ஸ்ரீ வட்டக்கச்சி நாகதம்பிரான் ஆலயத்தின் குருவாகவும், ஸ்ரீ ரங்கநாதப் பெருமானின் அருள்மிகு பக்தனாகவும் வட்டக்கச்சியில் காணப்படும் சிவன், முருகன், பிள்ளையார் போன்ற ஆலயங்களின் அர்ச்சகராகவும் இருக்கும் காலத்திலே இயலாமை காரணமாக அவரது செல்லப்பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் இளைப்பாறலானார். அங்கு ஐயப்பனின் அரும் பக்தனாகவும் சிவனை தினம் நினைக்கும் சிவபக்தனாகவும் தனது காலத்தினை இறைநாமத்தினை உச்சரித்தவண்ணம் வாழ்ந்து ஐயப்பனின் திரு நாளில் சிவகதியடைந்து சிவபதமடைந்தார்.

இவர் தம் ஆத்மா சாந்தியடைய இறைவனை பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிதுணை

ஓம் சக்தி



# கௌரிக் காப்பு

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

### வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தணச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



**நேரிசை வெண்பா**

**காப்பு**

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கும் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்தலைவைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பனைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாள்எனைக் கண்டாள் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணல்எரி தணல்எரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீஐயப்பன்

## நூற்றெட்டு சரணக்கோவை

| | |
|---|---|
| ஓம் கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அச்சங் கோயில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் குளத்துப் புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரமச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப் பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் பலவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரி பீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கருப்பண்ண சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கடுத்த சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின்நெய் அபிசேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராசாப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்வாமியே | சரணம் ஐயப்பா |

**தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்டசித்திகளை அடையுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

**கவசம் என்றால் காப்பு என்று பொருள் போருக்கு போகிறவன் கவசம் அணிந்து செல்கிறான். தன்னை காத்துக்கொள்வதற்காக இந்த உலகத்தில் மனித வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருக்கிறது. அதிலிருந்து நம்மை காத்துக்கொள்ள இந்தக் கவசம் பெரிதும் பயன்படும். நம்பிக்கைதான் அடிப்படை தெய்வ அருளும் வெற்றியும் கிட்டுவது உறுதி.**

## காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே

## நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத நாயகா வருக வருக
புஸ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்லினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட் கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினென் படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே

சபரி கிரீசனை நினைத்து நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்மையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்.

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரள்வளை காக்க
புஸ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்களை காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினை காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்கிரஹநாதன் நடுப்பகல் காக்க

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களை போக்கி அபயம் அளிப்பாய்

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே காப்பாய் ஏரிமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரீ கிரீசா

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக்கருள்வாய்

சூது பொறாமை பொய் கோபமில்லாமல்
சோரம் லோமம் துன்மார்க்கம் அல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருவாய்

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய்யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே

## நமஸ்ஹாரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரீகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினென் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகர யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ

சரணம் சரணம் சபரீகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்கள்

01) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?

**கண்டமாலை / தொண்டைவீக்கம்**

02) இரும்புச் சத்துக்குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?

**இரத்தச் சோகை**

03) உயிர்ச்சத்து A குறைவினால் ஏற்படும் நோய்கள் எவை?

**மாலைக்கண், தோல்வரண்டு போதல்**

03) உயிர்ச்சத்து C குறைவினால் ஏற்படும் நோய்கள் எவை?

**பல், எலும்பு ஆகியவற்றில் சீரற்ற வளர்ச்சி, ஸ்கேவி நோய்.**

## விளையாட்டுக்கள்

| விளையாட்டு | வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கரப்பந்து | 06 ✓ |
| உதைபந்து | 11 ✓ |
| துடுப்பாட்டம் | 11 ✓ |
| வலைப்பந்தாட்டம் | 07 ✓ |
| கூடைப்பந்தாட்டம் | 05 ✓ |
| கோற்பந்தாட்டம் | 11 . |

01) உள்ளக விளையாட்டுக்கள் எவை?

**சதுரங்கம், கரம், மேசைப்பந்து, பூப்பந்தாட்டம்**

02) கிராமிய விளையாட்டுக்கள் எவை?

**பல்லாங்குழி, சடுகுடு, தாயம், கிட்டிப்புள், கிளித்தட்டு**

03) குறுந்தூர ஓட்டத்திற்குரிய முழுக் கட்டளைகளும் எவை?

குறிப்பிற்குச் செல் (On your mark)
ஆயத்தமாகு (Set)
ஓடு (Go)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடிப்புக்கள்

01. டைனமோ (Dynamo) - மைக்கல் பரடே
02. குருதிச்சுற்றோட்டம் - வில்லியம் ஹார்வே
03. மின்குமிழ் - தோமஸ் அல்வா எடிசன்
04. ஒட்சிசன் வாயு - ஜோசப் பிறிஸ்லி
05. சைக்கிள் - மக்மில்லன்
06. தொலைபேசி - அலெக்சாண்டர் கிரகம்பெல்
07. ரேடியோ - மார்க்கோனி
08. விசர்நாய்க்கடித்தடுப்பு மருந்து - லூயிபாஸ்ரர்

## பொது அறிவு

01. இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம்
02. இலங்கையின் தேசிய பறவை எது?
காட்டுக்கோழி
03. இலங்கையின் தேசிய மலர் எது?
நீல அல்லி / நீலோற்பலம்
04. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
சேர்.வில்லியம் கொபல்லாவ
05. இலங்கையின் மிகப் பெரிய ஆறு எது?
மகாவலிகங்கை
06. இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் யார்?
குளோடியஸ் தொலமி
07. இலங்கையின் மிகப்பெரிய மலை எது?
பேதுருதாலகால மலை
08. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர் யார்?
திரு.கேணல் ஒல்கொட்
09. இலங்கையின் சித்திர சிற்பக் கலை ஆராய்ச்சியாளர் யார்?
டாக்டர் ஆனந்த குமாரசுவாமி
10. இலங்கைக்கு புனித வெள்ளரச மரக் கிளையைக் கொண்டு வந்தவர் யார்?
பிக்குணி சங்கமித்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பல இசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகெறிப்ப
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ளொடுங்குங் கருத்தினையறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாதாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள் வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | ப்ரஹ்மமுராரி | ஸுரார்சித | லிங்கம் |
| | நிர்மலபாஸித | ஸோபித | லிங்கம் |
| | ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 02. | தேவமுனிப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| | காமதறலம் | கருணாகர | லிங்கம் |
| | ராவண தர்ப்ப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 03. | ஸர்வஸுகந்த | ஸுலேபித | லிங்கம் |
| | புத்திவிவிர்த்தன | காரண | லிங்கம் |
| | ஸித்தஸுராஸுரே | வந்தித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 04. | கநக மஹாமணி | பூஷித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | தஷஸுயக்ஞ | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 05. | குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜ ஹாரஸ் | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 06. | தேவகணார்ச்சித | ஸோபித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏமச | லிங்கம் |
| | திநகரகோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 07. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வ ஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 08. | ஸுரகுரு ஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவநபுஷ்ப | ஸதார்சித | லிங்கம் |
| | பரமபதம் | பரமாத்மக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

லிங்காஷ்டகம் இதம் புண்ணியம்
ய:்.சித்சிவ சங்கீதோ
சிவலோகம் மலாப்புரோதி
சிவலேளஸஹ மோததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருவண்ணாமலையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதி கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப்போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பர்யா மாரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந் தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவா
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடந்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுண் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனு ரேதவன்பே ராருற்றா ராரயலா

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையாவழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினா
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதா
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றியருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

## திருப்பெருந்துறையில் அருளியது

### திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுவோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயோ.

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயோ.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளினை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினார் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒரு பால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயோ

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஓதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயோ

பப்பற வீட்டிலிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்பறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார் அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயோ

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவ னவன் எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுதத்ர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எது எமைப் பணிகொளு மாறாது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயோ

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயோ

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன் தொழும்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உல குக்குயி ரானாய்
எம்பெருமான்பள்ளி எழுந்தருளாயோ.

புவனியிற் போய்ப்பிற வாமையினால் நாம்
போக்குகின் றோம் அவ மே இந்தப்பூமி
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர்க் காணிக்கை...!

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1930 | | 2015 |
| 01 | | 01 |
| 21 | | 08 |

[illegible]

அமரர்

## சாந்தலிங்கம் குணரட்ணக்குருக்கள்

(திருநகர், கிளிநொச்சி)

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
அழைக் களித்த உறவுகளை
மனைவிட்டுச் சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கிறதே – நின் உறவின்
அழகுமத் துயக்கிறதே.....

[illegible]

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible]
சிவனொளி, [illegible]



# இதய அஞ்சலி....!

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1930 | | 2015 |
| 01 | | 01 |
| 21 | | 08 |

[illegible]

அமரர்

## சாந்தலிங்கம் குணரட்ணக்குருக்கள்

(திருநகர், கிளிநொச்சி)

[illegible]

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ 21 - 01 - 1934

கண்நெகிழ 08 - 01 - 2015



அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்
## திருநகர்

வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி
வீட்டுச் சென்ற வாடா மலரே..
உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல
உடைந்தது எங்கள் இதயமும் தான்..
நிழலில் இசைத்தாடி நினைவில் இழைத்தோடி
நெஞ்சில் உயிர் வாழும் உறவே..
தன் கடன் பெற்றோர் காற்றி மலர்ச் சிறகில்
நீ வளர்ந்தான் இன்று மறைந்தாய்
மண் கடல் வான் உள்ளளவும் மறவோமே

அன்னாரின் பிரிவால் ஆழ்ந்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாதன் சாமி
குடும்பத்தினர்
இரணைமடுச்சந்தி
கிளிநொச்சி

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ 21 - 01 - 1934

கண்நெகிழ 08 - 01 - 2015



அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்
## திருநகர்

காற்றினில் வந்த செய்தி கேட்டு
கலங்கியதே எம் நெஞ்சம்...
[illegible] கண்ட உங்களை
[illegible] காலனவன் என்று
இதுவரையவரை நாம் எண்ணவில்லை...
காலனுக்கு என்ன அவசரமோ?
எம்மை கதிகலங்க வைத்துவிட்டான்...
ஏதிலியாய் நாம் தவிக்க
அழைத்து விட்டான் எம்
[illegible]...

அன்னாரின் பிரிவால் ஆழ்ந்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரவி சாமி
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ 21 - 01 - 1934

கண்நெகிழ 08 - 01 - 2015



அமரர்

சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்

திருநகர்

காற்றினில் வந்த செய்தி கேட்டு
கலங்கியதே எம் நெஞ்சம்...
நேற்றுவரை கண்ட உங்களை
நொடிப்பொழுதில் காணோம் என்று
இற்றைவரை நாம் எண்ணவில்லை...
காலனுக்கு என்ன அவசரமோ?
எம்மை கதிகலங்க வைத்துவிட்டான்...
ஏதிலியாய் நாம் தவிக்க
அணைத்து விட்டான் எம்
ஒளிவிளக்கை...

அன்னாரின் பிரிவால் ஆழாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ச.ஜெகதீஸ்வரக் குருக்கள் குடும்பம்
155ம் கட்டை
காளி கோவில்


# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ 21 - 01 - 1934

கண்நெகிழ 08 - 01 - 2015





அமரர்

சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்

திருநகர்

காற்றினில் வந்த செய்தி கேட்டு
கலங்கியதே எம் நெஞ்சம்...
நேற்றுவரை கண்ட உங்களை
நொடிப்பொழுதில் காணோம் என்று
இற்றைவரை நாம் எண்ணவில்லை...
காலனுக்கு என்ன அவசரமோ?
எம்மை கதிகலங்க வைத்துவிட்டான்...
ஏதிலியாய் நாம் தவிக்க
அணைத்து விட்டான் எம்
ஒளிவிளக்கை...

அன்னாரின் பிரிவால் ஆழாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


சதீஸ்
வெளிநாட்டு பாசல் சேவை
கனகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ
21
-
01
-
1934



கண்நெகிழ
08
-
01
-
2015

சித்திவிநாயகர் கோவில் குருக்களின் தந்தையாரான
அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்
திருநகர்

வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி
வீட்டுச் சென்ற வாடா மலரே..
உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல
உடைந்தது எங்கள் இதயமும் தான்..
நிழலில் இசைந்தாய் நினைவில் இழைந்தோய்
நெஞ்சில் உயிர் வாழும் உறவே..
நல் கடன் பெற்றோர் காற்றி மலர்ச் சிறகில்
நீ வளர்ந்தாய் இன்று மறைந்தாய்.......
மண் கடல் வான் உள்ளவும் மறவோமே

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோலைநகர்
மக்கள்

# கண்ணீர்ப் பூக்கள்!

மலர்வு
21
01
1934



உதிர்வு
08
01
2015

## சாந்தலிங்கம் குணரட்ணக்குருக்கள்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

செல்வாநகர் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்..!

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1934 | 2015 |
| 01 | 01 |
| 21 | 08 |



[illegible]

அமரர்

## சாந்தலிங்கம் குணரட்ணக்குருக்கள்

[illegible]

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible]

---

# கண்ணீர் அஞ்சலி

| மண்மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 21 | | 08 |
| - | | - |
| 01 | | 01 |
| - | | - |
| 1934 | | 2015 |



அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்
திருநகர்

காற்றினில் வந்த செய்தி கேட்டு
கலங்கியதே எம் நெஞ்சம்...
நேற்றுவரை கண்ட உங்களை
நொடிப்பொழுதில் காணோம் என்று
இற்றைவரை நாம் எண்ணவில்லை...
காலனுக்கு என்ன அவசரமோ?
எம்மை கதிகலங்க வைத்துவிட்டான்...
ஏதிலியாய் நாம் தனிக்க
அணைத்து விட்டான் எம்
ஒளிவிளக்கை...

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இந்திரன் சாமி
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மண்மகிழ | கண்நெகிழ |
| --- | --- |
| 21 - 01 - 1934 | 08 - 01 - 2015 |



அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்

திருநகர்

காற்றினில் வந்த செய்தி கேட்டு
கலங்கியதே எம் நெஞ்சம்...
நேற்றுவரை கண்ட உங்களை
தொடுப்பொழுதில் காணோம் என்று
இற்றைவரை நாம் எண்ணவில்லை...
காலனுக்கு என்ன அவசரமோ?
எம்மை கதிகலங்க வைத்துவிட்டான்...
ஏதிலியாய் நாம் தவிக்க
அணைத்து விட்டான் எம்
ஒளிவிளக்கை...

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணன் சாமி
குடும்பம்

# கண்ணீர் அஞ்சலி

| மண்மகிழ | கண்நெகிழ |
| --- | --- |
| 21 - 01 - 1934 | 08 - 01 - 2015 |



அமரர்

## சாந்தலிங்கம் -குணரட்ணக்குருக்கள்

திருநகர்

நேற்று வரை எம்மோடு இருந்தவர்
எங்களில் ஒருவராய் அன்போடு வாழ்ந்தவர்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பார் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு நீங்கள் போனீர்கள்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஒருதய்யா
உங்கள் ஆத்மா சாந்தியுற உள்ளமதால் வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாலசுந்தரம் சாமி
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவன் அமரர் திரு.சாந்தலிங்கம் குணரத்தினக்குருக்கள் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறி எமக்கு சகல வழிகளிலும் முன்னின்று உதவியோர் மற்றும் வெளிநாடுகளில் எம் உறவுகளுடன் துயர் பகிர்ந்து கொண்டோர். நேரில் வரமுடியாமல் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டோருக்கும், வாகன உதவி புரிந்தோருக்கும், கிராமத்தினராலும், பாடசாலைச் சமூகத்தினராலும் மலர்வளையம் மலர் அஞ்சலி செலுத்திய உறவுகளுக்கும், பலவழிகளில் உதவிய சகலருக்கும் மற்றும் அந்தியேட்டி கிரிகை, வீட்டுக்கிருத்திய 11ஆம் நாள் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் இம்மலரை அழகுபெற அச்சிட்டு தந்த அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**இங்ஙனம்**


**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | திருஞானசம்பந்தர் | திருநாவுக்கரசர் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்கவாசகர் |
|---|---|---|---|---|
| அவதரித்த நாடு | சோழவளநாடு | திருமுனைப்பாடி | திருமுனைப்பாடி | பாண்டியநாடு |
| அவதரித்த ஊர் | சீர்காழிப்பதி | திருவாமூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| உரிய குலம் | வைதீக பிராமணர் | வேளாளர் | ஆதிசைவர் | ஆமாத்தியப்பிராமணர் |
| தந்தையார் பெயர் | சிவபாதவிருதையார் | புகழனார் | சடையனார் | சம்புபாதசிரியார் |
| தாயார் பெயர் | பகவதி அம்மையார் | மாதினியார் | இசைஞானியார் | சிவஞானவதியார் |
| பிள்ளைப்பருவப் பெயர் | பிள்ளையார் | மருணீக்கியார் | நம்பியாரூரர் | வாதவூரர் |
| வாழ்ந்த நூற்றாண்டு | கி.பி7ம்நூற்றாண்டு | கி.பி9ம் நூற்றாண்டு | கி.பி9ம் நூற்றாண்டு | கி.பி7ம் நூற்றாண்டு |
| அக்காலத்துக்குரிய மன்னன் | பாண்டியநெடுமாறன் | 1ம்மகேந்திர பல்லவன் | நரசிங்க முனையார் | அரிமர்த்தன பாண்டியர் |
| முதல் அருள் பெற்ற தலம் | திருத்தோணிபுரம் | திருவதிகை வீரட்டானம் | திருவெண்ணை நல்லூர் | திருப்பெருந்துறை |
| முதலில் பாடிய பதிகம் | தோடுடைய செவியன் | கூற்றாயினவாறு | பித்தாபிறை | சிவபுராணம் |
| பாடிய திருமுறைகள் | 1, 2, 3 | 4, 5, 6 | 7 | 8 |
| கிடைக்கப்பெற்ற பதிக எண் | 136 + 122 + 125 | 114 + 100 + 99 | 100 | திருவா658 + திரு.கோ400 |
| மொத்தமாகஅருளிய பதிகம் | 16, 000 | 4, 900 | 3, 800 | 1058 |
| இவர் ஆளுடைய.....? | ஆளுடையபிள்ளை | ஆளுடைய அரசு | ஆளுடைய நம்பி | ஆளுடைய அடிகள் |
| ஒழுகிய நெறி | கிரியை நெறி | சரியை நெறி | யோகநெறி | ஞானநெறி |
| ஒழுகிய மார்க்கம் | சற்புத்திரமார்க்கம் | தாசமார்க்கம் | சகமார்க்கம் | சன்மார்க்கம் |
| நின்ற நிலை (பருவம்) | மலர் | அரும்பு | காய் | கனி |
| வாழ்ந்த காலம் (வருடம்) | 16 | 81 | 18 | 32 |
| இறுதியாக பாடிய திலகம் | காதலாகிக்கசிந்து | எண்ணுகேன் என்சொல்லி | தானெனை முன்படைத்தான் | திருக்கோவையார் |
| முத்தி பெற்ற தினம் | வைகாசி மூலம் | சித்திரைச் சதயம் | ஆடிச்சுவாதி | ஆனிமகம் |
| முத்தி பெற்ற தலம் | திருப்பெருமண நல்லூர் | திருப்புகலூர் | திருத்தொடித்தான் மலை | தில்லைச்சிற்றம்பலம் |
| பெற்ற முத்தி | சாமீபம் (பதமுத்தி) | சாலோகம் (பதமுத்தி) | சாரூபம் (பதமுத்தி) | சிவசாயுச்சியம் (பரமுத்தி) |
| இவருடைய இல்லாள் | ம்நம்பியாண்டார் நம்பியின் மகள் | - | பரவையார் , சங்கிலியார் | - |
| இவர்களுக்கு கூறப்படும் மறுபெயர்கள் | ஞானசம்பந்தர், ஆளுடைய பிள்ளையார், சிவஞானம், பாலறவாயர் | மருணீக்கியார், உழவாரப்படையாளி, அப்பர், வாகீசர் | நம்பியூரர், ஆலாலசுந்தரர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன், சேரமான் தோழர், வன்றொண்டன் | தென்னவன் பிரமராயன், வாதவூரர், மாணிக்கவாசகர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org